உ

சிவமயம்

திருவாசகம்

# பிரார்த்தனைப்பத்து

## பொழிப்புரையுடன்.

இஃது

விளாத்திகுளம்

வி. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்களால்

மதுரை

மீனலோசனி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

(2-வது பதிப்பு.)

விலை அணா இரண்டு.

1925

OFFICE OF THE REGIS... 20 JUL 1925 MADRAS

உ

சிவமயம்.

# திருவாசகம்

# பிரார்த்தனைப்பத்து,

## பொழிப்புரையுடன்.

OFFICE OF THE REGISTRAR
20 JUL 1925
MADRAS

P.5481
22-04

இஃது

விளாத்திகுளம்

வி. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்களால்

மதுரை

மீனலோசனி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

(2-வது பதிப்பு.)

விலை அணா இரண்டு.

1925

Q23:1M324V
N35

181004

## ஸ்ரீமந் மாணிக்க வாசக சுவாமிகள்

## சரித்திரச் சுருக்கம்.

மாணிக்கவாசக ரென்பவர் தென்றிசையிலே, பாண்டிவள நாட்டிலே, வைகையாற்றங் கரையிலுள்ள திருவாதவூரிலே அமாத்தியர் என்கிற அந்தணர் குலத்தில் திருவவதாரஞ் செய்தருளினர். ஆதியிலே வாதவூரரென்பது அவருக்கு தந்தையரால் கொடுக்கப்பட்ட பெயராயிருந்தது. அவர் இளமைப் பருவம் கடப்பதற்கு முன்னகவே தம் மரபிற்குரிய வேதாகம முதலியவற்றையும், பிறநூல்களையும் கற்று வல்லவராயினர். இப்படி யிருக்கையில் மாணிக்கவாசகருடைய குணாதிசயங்களை யெல்லாம் மதுரை அரிமர்த்தன பாண்டியன் அறிந்து அவரைத் தன்னிடம் அழைப்பித்து அவருக்கு 'தென்னவன் பிரமாரயன்'' என்னும் பெயர் கொடுத்து தன்னிடத்தில் முதல் மந்திரியாக நியமித்துக் கொண்டான். அப்பால் மாணிக்க வாசகர் அரசனுக்கு இனியராயும், சிவபக்தி அடியார் பக்திகளில் சிறந்தவராயும், பெருஞ் செல்வத்தோடு கூடி வாழ்ந்து வருகையில். இந்த மண்ணுலக இன்பமும் அந்த விண்ணுலக இன்பமும் அநித்தியமென்கிற விவேகம் தோன்றலால் அவைகள் வெறுக்கப்பட்டன. ஆகையால் பேரின்ப வீட்டிற்கு எதுவாகிய தத்துவ ஞானத்தைப் போதிக்கக்கூடிய ஆசாரியரைக் காணுவதற்கு ஆசை கொண்டிருக்கையில் அரசன் கீழ் கடற்றுறையிலேசென்று குதிரைகள்வாங்கி வரும்படி அவரை ஏவினன். உடனே மாணிக்க வாசகர், அளவிறந்த திரவியங்களைக் கைக்கொண்டு சேனைகளுடன் புறப்பட்டு வழி நடுவிலே திருப்பெருந்துறை என்னும் பதிக்குச் சமீ

பித்தார். அப்பொழுது, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்கிற ஐந்தொழில்களை நடத்தும் ஆதி பகவனாகிய பரமசிவனார், அவருடைய மலபரிபாகமும், சத்திநிபாதமும், இருவினை யொப்பும் நோக்கி அவருக்கு அருள் செய்யும் பொருட்டு ஒரு ஞானாசிரியராகத் திருவுருக்கொண்டு, தமது கணங்கள் மாணாக்கராய்ச் சூழ்ந்திருக்க, தாம் திருப்பெருந்துறை யென்னும் ஸ்தலத்தில் ஒரு குருந்த மரத்தின் கீழே வீற்றிருந்தனர். அவரைத் தரிசித்தவுடனே, திருவாதவூரர் அளவில்லாத ஆனந்தங்கொண்டு அவர் திருவடிகளில் விழுந்து நமஸ்கரித்து அவரைச் சரணமடைந்து, தேவரீர் என்னை அடிமையாகக் கொண்டு அருள் புரிய வேண்டும் என்று வேண்டினார். இவரது அதி தீவிர பக்குவ நிலையை நன்றாயுணர்ந்த அந்நல்லாசிரியர் அங்ஙனமே இவரை ஆட்கொண்டு இவருக்கு ஞானோபதேசம் செய்தருளினார். அவ்வுபதேச மொழிகளைக் கேட்டறிந்த திருவாதவூரர் அன்புமேலிட, அற்புதமான ஞானப்பாடல்களைப் பாடத்தொடங்கினார். அவற்றைச் செவியுற்ற சிவபிரான் திருவுளங் களித்து இவர் திருவாய் மலர்ந்த திருவாசகங்கள் மாணிக்கங்கள் போல மதிப்பேறப் பெற்றிருந்ததனால் இவருக்கு மாணிக்கவாசகர் என்று திருநாமஞ் சூட்டக் காரணமேற்பட்டது. பின்பு இவர் மனமகிழ்ந்து துதித்து தாம் குதிரை கொள்ளக் கொண்டுவந்த பொருள் முழுவதையும் குரு தக்ஷிணையாகச் சமர்ப்பிக்க அப் பொருள்கொண்டு அத் திருப்பதியின் கோயிற் றிருப்பணி முதலிய சிவ புண்ணியங்கள் நடந்தேறின. இவர் இப்படி தம் வசமழிந்து பக்தி வலையிற்பட்டு அரசனேவிய தொழிலை மறந்திருக்கையில் அச் செய்தியை யறிந்த அரசன் சில தூதரை ஏவ, அவர்

கள் கொணர்ந்து கொடுத்த பத்திரிகையில் அடங்கிய அரசன் கட்டளையை யறிந்த வாதவூரர் சிவபிரானைத் தொழுது அப்பெருமான் கூறி யருளியபடி விடைபெற்று அரசனைச் சேர்ந்து சில நாளில் குதிரைகள் வந்து சேரும் என்று அரசனுக்குக் கூறினர். அந்நாளளவும் குதிரைகள் வாராதது கண்டு பாண்டியன் கோபங்கொண்டு தான் கொடுத்த பொருளைத் திருப்பிக்கொடுத்து விடும்படி இவரை நிர்ப்பந்தித்துச் சிறையில் வைத்து வருத்த, மாணிக்க வாசகாது வேண்டுகோளுக்கு இரங்கியபரமதயாளுவாகிய சிவபெருமான் தமது திவ்ய சக்தியால் காட்டில் திரிகிற நரிகளை யெல்லாம் குதிரைகளாக்கி தாம் ஒரு குதிரைவணிகன் உருவங்கொண்டு வந்து அக்குதிரைகளை அரசனிடம் ஒப்புவித்து அவனுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கி வாதவூரரை விடுவித்து மீண்டனர். பின்பு அன்றிரவே அப்பரிகளெல்லாம் நரிகளாகி மிக்க தீங்கு விளைவிக்க அரசன் அதிக கோபங்கொண்டு வாதவூரரை மீண்டும் மிக வருத்த முயலவே, இவர் சிவபிரானைப் பிரார்த்தித்ததனல் சுவாமி அடியவர் மீதருளும், அரசன்மீது கோபமும் கொண்டு, வைகையாற்றை மதுரை நகரத்தின் மேற்பெருகி வரச் செய்து இவரது மகிமையை அரசனுக்குவிளக்கினர். அப்பால் மாணிக்கவாசகர் மந்திரித் தொழிலைவிட்டு பாண்டிய ராஜனிடத்து விடைபெற்று மதுரையினின்று திருப்பெருந்துறைக்குச் சென்று தமது பரமாசிரியராகிய சிவபிரானை வணங்கி அவரது அடியார் கூட்டத்தில் ஒருவராய் விளங்கியிருக்கும்பொழுது சிவபிரான் "நீ இங்கே சிலகாலம் இருந்து பின்பு ஸ்தல யாத்திரை செய்து சிதம்பரத்துக்குச்சென்று அங்கு முத்திபெறுவாய்" என்று இவருக்குக் கட்டளையிட்டு மறைந்தருளினபின், இவர் தமக்கு உட

னே பேறுகிடையாமல் காலம் நீடிப்பதற்கு இரங்குவாராகி சிவபிரான் விஷயமாக பக்தியோடு பல பாடல்கள் பாடி அப் பெருமானது திருவருளைப் பெறக் கருதி சிலபிரபந்தங்களை யும், சில பதிகங்களையும் பாடினர், அவைகளில் "பிரார்த் தனைப்பத்து" என்னும் பதிகமும் ஒன்ருகும். அப்பால் மாணிக்கவாசகர் சிவபிரானிட்ட கட்டளைப்படி சிதம்பர மென்னும் ஸ்தலத்திற்கு எழுந்தருளி நடேசரைத் தொழுது பலவகையான திருப்பாடல்கள் செய்து பின்பு வேதமார்க் கத்துக்கு மாறுபட்ட புத்தரை வாதில் வென்று, ஊமைப் பெண்ணைப் பேசும்படி செய்து, பின்பு சிலநாள் அந்த ஸ்த லத்தில் இருந்தருளினர். அப்போது கடவுளானவர் ஓரந் தணராகி அவரிடத்திலே சென்று அவர் அந்த ஸ்தலத்தி லும் மற்றும் பல ஸ்தலங்களிலும் செய்திருக்கும் பாடல் களையெல்லாம் தொகுத்து திருமுறையாகக் கூறவும், திருக் கோவையார் பாடவுங் கேட்டு, அவர் திருவாய் மலர்ந்தவண் ணம் தமது அருமைத் திருக்கையால் எழுதி அப்புத்தகங் களில் "அழகிய திருச்சிற்றம்பல முடையார்" எனக் கை யெழுத்தும் வைத்து மறைந்தருளினர். அதன் பின்பு மாணி க்க வாசகரும் சோதிர் மயமாக விளங்கிய சிதாகாசத்தில் கலந்தருளினர்.

திருச்சிற்றம்பலம்.

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த

## திருவாசகம்,

# பிரார்த்தனைப்பத்து.

---

கலந்துநின் னடியா ரோடன் றுவாளா களித்திருந்தேன்
புலர்ந்து போன காலங்கள் புகுந்து நின்ற திடர்பின்னா
ளுலர்ந்துபோனே னுடையானேயுலவாவின்பச்சுடர்காண்பா
னலந்து போனே னருள்செய்யா யார்வங் கூர வடியேற்கே.

(பொழிப்புரை) சுவாமி! அந்நாளில் உனது அடியார்களுடனே சந்தோஷ மடைந்திருந்தேன். இப்பொழுது காலங்கள் வீணாய்ப் போய் துன்பம் மிகுந்து அதனால் வாடிப் போய்விட்டேன். எப்பொழுதும் சாஸ்வதமான இன்பத்தைக் கொடுக்கக்கூடிய உன்னுடைய ஜோதி ஸ்வ ரூபத்தைப் பார்ப்பதற்கு ஆசையுடையவனாய் மிகவும் ஏங்கி கிற்பதால் உன்னுடைய அடியவனாகிய எனக்கு அன்புடனே தரிசனம்தந்து முத்தி கொடுத்தருள வேண்டும்.

அடியார் சிலருன் னருள்பெற்றா ரார்வங் கூர யானவமே, முடையார் பிணத்தின் முடிவின்றி முனிவா லடியேன் மூக்கின்றேன், கடியே னுடைய கடுவினையைக் களைந்துன் கருணைக் கடல்பொங்க, உடையா யடியே னுள்ளத்தே யோவா துருக வருளாயே. (2)

(பொ-ரை.) சுவாமி! உன்னுடைய அடியார்கள் சிலர் உனது கருணைபெற்று சந்தோஷ மடைந்திருக்க நான் மாத்திரம் வீணாய்ப் பிணம்போல் வெறுப்புக் கிடமாய் மேலும் மேலும் வயது முதிர்வடைகின்றேன். கொடியவனாகிய எனது கர்மத்தை ஒழித்து உனது கிருபா சமுத்திரமானது என் மீது பொங்கிவழிந்து இடைவிடாது உருக்க முண்டாக வருள் செய்வாய்.

அருளா ரமுதப் பெருங்கடல்வா யடியா செல்லாம் புக்
கழுந்த, விருளா ராக்கை யிதுபொறுத்தே யெய்த்தேன்
கண்டா யெம்மானே, மருளார் மனத்தோ ருன்மத்தன்
வருமா லென்றிங் கெனைக்கண்டார், வெருளா வண்ண மெய்
யன்பை யுடையாய் பெறநான் வேண்டுமே. (3)

(பொ-ரை.) எனது தலைவனே! உன்னுடைய கருணையாகிய அருமையான பெரியஅமிர்தக் கடலிலே உன்னுடையஅடியார்கள் எல்லாரும் இறங்கிமூழ்க,நான்மாத்திரம் அஞ்ஞான இருள்நிறைந்த இவ்வுடம்பைச் சுமந்து தளர்ந்து வாடுவதை நீ யறியாயோ?இவ்வுலகத்தில் என்னைக் கண்டவர்கள் மருட்சி நிறைந்த மனத்தையுடைய ஒருபித்தன் வருகிருனென்று அஞ்சாதபடி உன்னிடத்து உண்மையான அன்பை அடைய வேண்டும்.

வேண்டும் வேண்டு மெய்யடியா ருள்ளே விரும்பி யெ
னையருளா, லாண்டா யடியே னிடர்களைந்த வமுதே யருமா
மணிமுத்தே, தூண்டா விளக்கின் சுடரனையாய் தொண்ட
னேற்கு முண்டாங்கொல், வேண்டா தொன்றும் வேண்
டாது மிக்க வன்பே மேவுதலே. (4)

(பொ-ரை.) அருமையான சிறந்த முத்துப் போன்றவனே! தூண்டப்படாத ஒரு விளக்கினது ஜோதியை ஒப்பவனே!உனக்கு மிகவும் பிரியமாயுள்ள உண்மையானதொண்டர்களுடையநடுவிலே என்னையும் ஒருவனுக திருவுளம் உகந்துகருணையினல் அடிமைகொண்டாய். இவ்வாறு அடிமை கொண்டும் அடியேனுக்கு விரும்பத் தகாத ஒருபொருளையும் விரும்பாமல் உன் விஷயமான மிகுந்த பத்தியைப் பொருந்தும் தன்மை உண்டாகும்படி செய்வாய்.

மேவு முன்ற னடியாருள் விரும்பி யானு மெய்ம்மையே
காவி சேருங் கயற்கண்ணாள் பங்கா வுன்றன் கருணையினுர்
பாவி யேற்கு முண்டாமோ பரமா னந்தப் பழங்கடல்சேர்
தாவி யாக்கை யானெனதென் றியாது மின்றி யறுதலே. (5)

181604



(பொ-ரை) நீலோற்பல மலரையொக்கின்ற கயல்மீன்போற் புரள்கின்றகண்களையுடையபார்வதிதேவியைஇடப்பக்கத்தில்உடையவனே!உன்னைவிரும்புகிற அடியார்களுள் நானும்ஒருவனென்பது உண்மையே. உன்னுடைய அருளினால் தீவினையுடையேனானஎனக்கும் மேலான ஆனந்தமாகிய பழமையான கடலை யடைந்துஉயிரையும் உடம்பையும் யான்எனது என்ற அபிமானித்தல் சிறிதும் இல்லாமற் பற்றுந் தன்மை உண்டாகுமோ.

அறவே பெற்றார் நின்னன்ப ரந்த மின்றி யகநெகவும்
புறமே கிடந்து புலைநாயேன் புலம்பு கின்றே னுடையானே
பெறவே வேண்டு மெய்யன்பு பேரா வொழியாப் பிரிவில்லா
மறவா நினையா வளவிலா மாளா வின்ப மாகடலே. (6)

(பொ-ரை.) சுவாமி! நிலைமை மாறாததும், ஒழியாததும்,நீங்குதல் இல்லாததும், மறத்தற்கு அரியதும்,நினைக்கமுடியாததும்,வரம்பில்லாததும், அழிவற்றதுமான பேரின்பமாகிய வெள்ளத்துக்கு பெரிய கடல்போல இடமாக உள்ளவனே! உனது அடியார்கள் உன்னுடைய மெய்யன்பை மிகுதியாகப் பெற்றவர்களாய், வரம்பில்லாமல் மேன்மேலும் மனம் உருகிக்கொண்டிருக்க, நான் மாத்திரம் நீசத்தன்மையுள்ள நாய்போல் கடைப்பட்டு அந்த மெய்யன்புக்குப் புறம்பாகவே இருந்து விசனிக்கின்றேன். அடியேனும் அந்த மெய்யன்பைப் பெறும்படியாகவே அருள் செய்யவேண்டும்.

கடலே யனைய வானந்தங் கண்டா ரெல்லாங் கவர்ந்துண்ண, விடரே பெருக்கி யேசற்றிங் கிருத்த லழகோ வடிநாயே, னுடையாய் நீயே யருளுதியென் றுணர்த்தா தொழிந்தே கழிந்தொழிந்தேன், சுடரா ரருளா லிருணீங்கச் சோதி யினித்தான் றுணியாயே. (7)

(பொ-ரை.) மட்டில்லாத ஆனந்தத்தை உன்னைத் தரிசித்த அடியவர்க ளெல்லோரும் கொள்ளை கொண்டு அநுபவிக்க,உனக்கு நாய்போல் அடிமைப்பட்டவனான நான் மாத்திரம் துன்பத்தை மிகுதியாகப் பெற்றுத்துக்கித்து இவ்வுலகில் இருத்தல் அழகாமோ? என்னை யடிமையாக வுடையவன் நீ யாதலால், யான் சொல்லா மலே நீ எனக்குக் கருணை செய்வாயென்று எண்ணி இதுவரை யில் உன்னிடம் சொல்லா தொழிந்தே காலங்கழித்துவிட்டேன். ஆகையால் பரஞ்சோதி ஸ்வரூபமானவனே! போனதுபோக, இனி யாயினும் அருமையான உன்னுடைய கருணையாகிய ஒளியினால் எனது பிறவித் துன்பமாகிய இருள் அழியும்படி துணிந்திடுவாய்.

துணியா வுருகா வருள்பெருகத் தோன்றுந் தொண்ட ரிடைப்புகுந்து, திணியார் மூங்கிற் சிந்தையேன் சிவனே நின்று தேய்கின்றேன், அணியா ரடியா ருனக்குள்ள வன்புந் தாரா யருளளியைத் தணியா தொல்லை வந்தருளித் தளிர்ப் பொற் பாதந் தாராயே. (6)

(பொ-ரை.) சிவனே! நீயே பரம்பொருள் என்று துணிந்து மனமுருகிஉனது கருணையானது தங்கள்மீது பெருகும்படி தோன் றியுள்ள உனது அடியார்களது கூட்டத்திலே வலிமை பொருந் திய வளையாத மூங்கில் போன்ற வணக்கமில்லாத மனத்தையுடை யவனான நானும் ஒருவனாய்ச் சேர்ந்து நின்று அதற்குரிய பயனை யடையாமல் மெலிகின்றேன். அந்தரங்கரான அவ்வடியார்களுக்கு உன் பக்கலுள்ள மெய்யன்பு போன்ற மெய்யன்பையும் எனக்கு உண்டாகும்படி அருள் செய்வாய், உனது திருவருள் கனிய தாம சஞ் செய்யாமல் விரைவில் நீ இங்கு எழுந்தருளித் தரிசனந் தந்து தளிர்போல் மென்மையான உனது திருவடியையும் தந்தருள்வாய்.

தாரா வருளொன் றின்றியே தந்தா யென்றுன் றமரெல்லா
மாரா நின்றா ரடியேனு மயலார் போல வயர்வேனோ
சீரா ரருளாற் சிந்தனையைத் திருத்தி யாண்ட சிவலோகா
பேரா னந்தம் பேராமை வைக்க வேண்டும் பெருமானே. (9)

•

(பொ-ரை.) தாராத அருள்சிறிதும் இல்லாமலே உனது அருள் முழுவதையும் தந்தருளினை யென்று உன் அடியார்களெல்லாரும் களித்து நின்றார்கள். அங்ஙன மிருக்க, நானொருவன் மாத்திரம் உனக்கு அடிமையாகாதவர் போலத் தளரக் கடவேனோ. சிறப்பு மிகுந்த கருணையினால் என் மனத்தைச் செவ்வைப்படுத்தி என்னை யடிமைகொண்ட சிவலோகம் உடையானே! என்னையும பேரின்பத்தில் நிலைபெயராமல் வைத்தருள வேண்டும்.

•

மானோர் பங்கா வந்திப்பார் மதுரக் கனியே மனநெகா,
நானோர் தோளாச் சுரையொத்தா னம்பி யித்தால் வாழ்ந்
தாயே, யூனே புகுந்த வுனையுணர்ந்தே யுருகிப் பெருகு முள்
ளத்தைக், கோனே யருளும் காலந்தான் கொடியேற் கென்
றோ கூடுவதே. (10)

(பொ-ரை.) பார்வையில் மான்போன்ற உமாதேவியை ஒரு பாகத்தில் உடையவனே! வணங்குகின்ற அடியார்களுக்கு இனிதான கனியைப்போன்றவனே! நான் மெய்யன்பினால் மனம் நெகிழாமல் துளைக்கப்படாத ஒரு சுரைக்காயை ஒத்திருந்தால் இதனால் நீ வாழ்வடைந்தாயோ. எனது உடம்பினுள்ளே புகுந்த உனது நிலைமையை உள்ளபடி அறிந்து,நெகிழ்ந்துஉருகிக்கரையும்படியான மனத்தை இறைவனே! நீ எனக்கு அருள்செய்யுங் காலம் கொடியவனான எனக்கு எப்பொழுது உண்டாகுமோ?

கூடிக் கூடி யுன்னடியார் குனிப்பார் சிரிப்பார் களிப்பாரா
வாடி வாடி வழியற்றேன் வற்றன் மரம்போ னிற்பேனோ
ஊடி யூடி யுடையாயொடு கலந்துள் ளுருகிப் பெருகிநெக்
காடி யாடி யானந்த மதுவே யாக வருள்கலந்தே. (11)

(பொ-ரை.) உன்னுடைய அடியார்கள் கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து சிவானந்தத்தால் கூத்தாடுபவரும், சிரிப்பவரும், களிப்பவருமாக இருக்க, அவ்வானந்தத்தைப் பெற வழியை உடையேனல்லாத நானொருவன் மாத்திரம் மிகவும் வாட்டமடைந்து பட்டுப்போன மரம்போல் பாழ்பட்டு நிற்பேனோ. அடியேன் பிணங்கிப் [illegible]னங்கி உடையவனாகிய உன்னோடு கலந்து மனம் நெகிழ்ந்து உருகிக்கரைந்து கூத்தாடிக் கூத்தாடி சிவானந்த மயமாம்படி அடியேனை உன்பக்கம் சேர்த்துக் கொண்டருள்வாய்.

முற்றிற்று.

---

மீனலோசனி
அச்சியந்திரசாலை,
மதுரை.

181006